வாடகை கட்டுப்பாட்டாளர் தீர்ப்பாயம், திருமங்கலம்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
வாடகை கட்டுப்பாட்டாளர்
(முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்)

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் நாள், செவ்வாய்க்கிழமை
RLTOP No.10/2021
CNR No.TNMD130001492021
-----

காளப்பன்பட்டி, தும்மக்குண்டு, சிந்துப்பட்டி, வாகைக்குளம், தொண்டைமண்டல முதலியார் சங்கம் அதன் செயலாளர், மதுரை, S.S.காலனி, எண்.10, ஜவஹர் 1வது தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ராமசாமி என்பவரின் மகன் R.குருசாமி மூலம்.

... மனுதாரர் /நிலச்சுவான்தாரர்

/எதிர்/

1. மதுரை, திருப்பரங்குன்றம், எண்.10, படைக்காட்டித்தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ஆறுமுகம் என்பவரின் மனைவி இந்து சுமார் 78 வயதுள்ள ராஜாமணி (இறப்பு).

2. மதுரை, திருப்பரங்குன்றம், எண்.10, படைக்காட்டித்தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ஆறுமுகம் என்பவரின் மகன் இந்து சுமார் 58 வயதுள்ள கிருஷ்ணன்.

3. மதுரை, திருப்பரங்குன்றம், எண்.10, படைக்காட்டித்தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ஆறுமுகம் என்பவரின் மகள் இந்து சுமார் 56 வயதுள்ள சாந்தி.

4. மதுரை, திருப்பரங்குன்றம், எண்.10, படைக்காட்டித்தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ஆறுமுகம் என்பவரின் மகன் இந்து சுமார் 54 வயதுள்ள முருகன்.

5. மதுரை, திருப்பரங்குன்றம், எண்.10, படைக்காட்டித்தெரு என்ற முகவரியில் வசித்து வரும் ஆறுமுகம் என்பவரின் மகள் இந்து சுமார் 58 வயதுள்ள தமிழ்செல்வி.

... எதிர்மனுதாரர்கள்/ வாடகைதாரர்கள்

மனுச்சொத்திலிருந்து எதிர்மனுதாரர்கள்/வாடகைதாரர்களை சுவாதீனத்திலிருந்து வெளியேற்றி காலி சுவாதீனத்தை மனுதாரர்/நிலச்சுவான்தாரர் வசம் நீதிமன்ற நிர்ணம் செய்யும் கால அவகாசத்திற்குள் எதிர்மனுதாரர்கள்/வாடகைதாரர்கள் காலி சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிட கோரி இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | : | ரூ.684/− |
| மனு தாக்கலான நாள் | : | 09.07.2021 |

இந்த மனுவானது கடந்த 16.04.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ராமபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள்

ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், மனு, எழுத்துப்பூர்வ வாதுரை, எதிருரை, மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**தீர்ப்பாணை**</u>

1. **முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் மனுச்சொத்தை காலி செய்து மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது. மேற்படி, எதிர்மனுதாரர்களால் இந்நீதிமன்றத்தில் மனுச்சொத்தின் வாடகையாக வைப்பீடு செய்யப்பட்ட ரூ.8100/–ஐ மனுதாரர்கள் சட்டப்படியாக உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ள உத்தரவாணை இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுகிறது.
2. செலவு தொகை இல்லை. (இருதரப்பிலும் செலவு தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.)

<u>**சொத்து விபரம்**</u>

In Madurai district, Madurai South Taluk, Thirupparankundram Town, Periya ratha Veethi, the building bearing door no.105, within the following boundaries.

On the West – Krishnan Kovil

On the East and North – Land

On the South – Big Car Street

In the said building the portion occupied by the respondent measuring 113 Sq.ft. in which the respondent is running a petty shop.

**<u>செலவு தொகை பட்டியல்</u>**

(இருதரப்பிலும் செலவு தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.)

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டும் இந்நீதிமன்ற முத்திரையிடப்பட்டும் வழங்கப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.28 11:16:49 +0530

வாடகை கட்டுப்பாட்டாளர்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

R.L.T.O.P. No.10/2021
Ex-order
Date : 28.04.2026